பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
17 07 2025 7 15
வியாழக்கிழமை காலை
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் 8 ஆயிரம் பேருக்கு அரசு பணி நியமன ஆணைகளை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வழங்குகிறார்.

2. சர்வதேச நீதி பாதுகாப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

3. பீஹாரில் வாக்காளர் சரிபார்ப்பு நடவடிக்கைகளில் இதுவரை 6 கோடியே 99 லட்சத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

4. ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா மாநிலங்களுக்கு இடையே நிலவும் நீர் தொடர்பான விவகாரங்களுக்கு தீர்வு காண இரு மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசின் சார்பில் குழு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

5. ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் கதே – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று ஜெய்ப்பூரில் பயணம் மேற்கொள்கிறார்.

அங்குள்ள தாடியா கிராமத்தில் நடைபெற உள்ள கூட்டுறவு மற்றும் வேலைவாய்ப்பு திருவிழாவில் அவர் பங்கேற்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் அரசுப் பணிகளில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 8 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்குகிறார்.

பல்வேறு திட்டப் பயனாளர்களுக்கு சான்றிதழ்களையும், காசோலைகளையும் அவர் வழங்க உள்ளார்.

தானிய சேமிப்புக்கா கட்டப்பட்டுள்ள 24 கிடங்குகளையும், 64 தானிய விற்பனை நிலையங்களையும் அவர் திறந்து வைக்க உள்ளார்.

காவல்துறையினர், ராணுவத்தினர் உள்ளிட்டோரின் பயன்பாட்டிற்கான 100 புதிய காவல்துறை வாகனங்களின் சேவையையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர் பொதுக்கூட்டம் ஒன்றிலும் திரு அமித் ஷா உரையாற்ற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா மாநிலங்களுக்கு இடையே நிலவும் நீர் தொடர்பான விவகாரங்களுக்கு தீர்வு காண இரு மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசின் சார்பில் குழு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

நீர் மேலாண்மை குறித்த கருத்துகள் இதில் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

கிருஷ்ணா ஆற்றுப்படுகைக்கு வரும் நீரின் அளவைக் கண்காணிப்பதற்கு **Telemetry** கருவியைப் பொருத்துவதற்கு இருதரப்பும் ஒப்புக்கொண்டன. ஸ்ரீசைலம் அணையின் பராமரிப்பு தொடர்பான விவகாரங்களுக்கு விரைவில் தீர்வு காணவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

கிருஷ்ணா நதி மேலாண்மை வாரியத்தின் அலுவலகத்தை விஜயவாடா அல்லது அமராவதிக்கு மாற்றவும் முடிவு செய்யப்பட்டது.

<<<<>>>>

பீஹாரில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி நடைபெற்று வரும் வாக்காளர் சரிபார்ப்பு நடவடிக்கைகளின்போது இதுவரை 6 கோடியே 99 லட்சத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

6 புள்ளி எட்டு ஐந்து சதவீத வாக்காளர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

இந்த வாக்காளர் சரிபார்ப்பு பணியின்போது ஒன்று புள்ளி ஐந்து ஒன்பது சதவீத வாக்காளர்கள் இறந்துவிட்டதும், 2 புள்ளி 2 சதவீத வாக்காளர்கள் நிரந்தரமாக குடிபெயர்ந்துவிட்டதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் 4 புள்ளி ஐந்து மூன்று சதவீத வாக்காளர்கள் அவர்கள் குறிப்பிட்ட முகவரியில் வசிக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த சரிபார்ப்புப் பணியின்போது தகுதியுள்ள வாக்காளர்கள் விடுபடக்கூடாது என்பது உறுதி செய்யப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அஞ்சல் சேவையில் ஈடுபடுவதற்கான உரிமம் பெற்ற நிறுவனங்களை தொடங்குவதற்கு அஞ்சல்துறை விண்ணப்பங்களை வரவேற்கிறது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், அஞ்சல்தலைகள் விற்பனை, விரைவு தபால், பதிவு தபால், பணவிடை ஆகியவற்றைப் பதிவு செய்தல் மற்றும் சிறுவகை சேவைகள் உட்பட அஞ்சல் சேவைகளை மேற்கொள்வதற்கு உரிமம் பெற்ற நிறுவனங்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும் என்று தெரிரி

இதற்காக தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் கூறியுள்ளது.

இதுகுறித்த விவரங்களை அருகில் உள்ள கோட்ட அஞ்சல் அலுவலகங்களில் அறிந்துகொள்ளலாம் என்றும், விண்ணப்பங்களை சமர்ப்பிக்க இம்மாதம் 31ஆம் தேதி கடைசி நாளாகும் என்றும் அஞ்சல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சர்வதேச நீதி பாதுகாப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

உலக அளவில் நடைபெறும் குற்றச் செயல்களுக்கு எதிராக நீதி வழங்குவதற்கு சர்வதேச நீதிமன்றம் 1998ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த சர்வதேச நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் வகையில் அவர்களுக்கான சட்ட உதவிகளை அளிப்பதற்கு இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது.

உலக அளவில் அமைதியைப் பாதுகாப்பதற்கும், குற்றங்களைத் தடுப்பதற்கும் இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது.

<<<<>>>>

கேரளா, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா, தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களிலும், லட்சத்தீவிலும் அடுத்த 6 நாட்களுக்கு கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், பீஹார், சத்தீஸ்கர், ராஜஸ்தான், ஹரியானா, சண்டிகர், ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு-கஷ்மீர், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தென்னாப்பிரிக்கா மீது அமெரிக்கா விதித்துள்ள 30 சதவீத வரி மூலம் வேளாண் மற்றும் வாகன உற்பத்தி துறை பாதிக்கப்படக் கூடும் என்று தென்னாப்பிரிக்க மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

இதன் மூலம் ஒரு லட்சம் பேர் வேலைவாய்ப்பை இழக்கக்கூடும் என்று தென்னாப்பிரிக்க மத்திய வங்கி ஆளுநர் **Lesetja** தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற வரிகளால் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கார்களின் எண்ணிக்கை 80 சதவீதம் குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

அமெரிக்காவின் அலாஸ்காவில் நள்ளிரவு 2 மணி அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் 7 புள்ளி மூன்றாக பதிவானது.

சேதம் குறித்த தகவல் இதுவரை ஏதும் இல்லை. சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை.

<<<<>>>>

யுக்ரைன் நாட்டின் முக்கிய நகரங்களில் 400 ட்ரோன்களை ஏவி ரஷ்யா தாக்குதல் நடத்தியதில் எரிசக்தி கட்டமைப்புகள் சேதமடைந்ததாக யுக்ரைன் தெரிவித்துள்ளது.

இதனை அந்நாட்டு அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கி உறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையே ரஷ்யா ஏவிய ட்ரோன்களில் பெரும்பாலானவை யுக்ரைன் விமானப் படையால் வீழ்த்தப்பட்டதாக கூறப்படுகிறது.

ரஷ்ய தாக்குதல் காரணமாக சுமார் 80 ஆயிரம் குடும்பங்கள் மின் தடையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் கதே – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 7-5, 6-3 என்ற செட் கணக்கில் கொலம்பியாவின் **Nicolas** – மெக்சிகோவின் **Reyas Varela** இணையை வென்றது.

<<<<>>>>

சான்மெரினோவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Siddhant Bandhia** – பல்கேரியாவின் **Alexandar Donski** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 7-5, 6-3 என்ற செட் கணக்கில் பொலிவியாவின் **Alejandro – Fedrico** இணையை வென்றது.

<<<<>>>>

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி, 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

<<<<>>>>

சவுத்தாம்டனில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 258 ரன் எடுத்தது.

259 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி, 48 புள்ளி 2 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 262 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக தீப்தி ஷர்மா 62 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரில் இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை மறுநாள் லண்டனில் நடைபெற உள்ளது.

<<<<>>>>

20 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் நட்புணர்வு கால்பந்து போட்டியில் இந்தியா 4-1 என்ற கோல் கணக்கில் உஸ்பெகிஸ்தானை வென்றது.

<<<<>>>>

சென்னையில் நடைபெற்று வரும் முருகப்பா தங்கக் கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில் இந்திய ராணுவ அணி 2-1 என்ற கோல் கணக்கில் மஹாராஷ்டிரா அணியையும், இந்திய கடற்படை அணி 4-1 என்ற கோல் கணக்கில் மத்திய நேரடி வரிகள் வாரிய அணியையும் வென்றன.

<<<<>>>>

இந்தியா-ஏ – பெல்ஜியம் அணிகளுக்கு இடையேயான ஹாக்கிப் போட்டி பெல்ஜியத்தின் **Antwerpen** நகரில் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

2028ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி ஜூலை 12ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை நடைபெறும் என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளது.

மகளிர் அணிக்கான இறுதிப்போட்டி 2028ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் தேதியும், ஆடவர் அணிக்கான இறுதிப் போட்டி ஜூலை 29ஆம் தேதியும் நடைபெறும் என்று தெரிவித்துள்ளது.

ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் அணியில் தலா 6 அணிகள் இடம்பெற உள்ளன.

**<<<<the End>>>>**